# மஸ்ஜிதுந் நபவி





மக்கா நகரில் பிறந்த நபி
மதீனா நகரில் புகுந்த நபி
வல்லான் இறையை வணங்கிடவே
வடிவாய் அமைத்தார் ஒரு பள்ளி.

அனாதைச் சிறுவர் தம் நிலத்தை
அன்பளிப்பாக வழங்கியதை
ஏற்றார் பணமும் கொடுத்தாரே
எங்கள் நபிகள் கோமானே.

மரத்தை வெட்டிச் சரித்தார்கள்
மண்ணைக் கொத்தி விரித்தார்கள்
உயர்ந்தோர் தாழ்ந்தோர் பாராமல்
உவந்து வேலை செய்தார்கள்.

ஈத்த மரத்தூண் தாங்கி நிற்க
ஈத்த வோலை நிழல் கொடுக்க
வெற்றுத் தரையில் தலைபதிக்க
எழுந்த மஸ்ஜி துந்நபவி.

காலம் நகர்ந்து போனதுவே
கட்டடக் கலைகள் வளர்ந்தனவே
அழகிய குப்பா மினாராக்கள்
அங்கு தோன்றி இலங்கினவே.

அண்ணல் நபியின் ரவ்ழாவும்
அண்டி யிருக்கும் நற்றலமும்
எங்கள் உள்ளம் கவர்ந்தனவே
என்றும் மறவோம் மறவோமே.

## பயிற்சி

**'அ' பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு 'ஆ' பகுதியில் விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து 'அ' பகுதியில் இடப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் விடையின் இலக்கத்தை எழுதுங்கள்.**

**'அ'**

(1) முஹம்மத் நபி(ஸல்) அவர்கள் ஏன் மதீனாவில் ஒரு பள்ளியைக் கட்டினார்கள்? ( )

(2) அந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்ட நிலம் யாருக்குச் சொந்தமானது? ( )

(3) அதன் கூரையைத் தாங்கி நின்றது எது? ( )

(4) முஹம்மத் நபி(ஸல்)அவர்களின் ரவ்ழா எங்கு உள்ளது? ( )

**'ஆ'**

(1) மஸ்ஜிதுந் நபவியின் பக்கத்தில் உள்ளது.

(2) அனாதைச் சிறுவர்களுக்குச் சொந்தமானது.

(3) ஈத்த மரத்தூண்கள் தாங்கி நின்றன.

(4) அல்லாஹ்வை வணங்குவதற்காகக் கட்டினார்கள்.